மேலூர் நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை திரு.சொ.ஆறுமுகம்

ந.க.எண்.1724/2023/எப்1 நாள்.27.03.2024

பொருள் மனைப்பிரிவு- மேலூர் நகராட்சி- மேலூர் கிராமம் **வார்டு பி,ப்ளாக்** 21 நகரளவு எண்.10/34(Old R.S.396/1) ல் கட்டுப்பட்ட 53 சென்ட் பரப்பளவில் அமைந்துள்ள மனையிடத்திற்கு இறுதி அனுமதி வழங்குதல்- தொடர்பாக.

பார்வை :

1) உதவி இயக்குநர்/உறுப்பினர் செயலர்(பொ) மதுரை மாவட்டம் நகர் ஊரமைப்பு அலுவலகம், மதுரை உள்ளூர் திட்டக்குழுமம் அவர்களின் அனுமதி ந.க.எண்.74/2023/SWP/TJDOMLL9/2023/TCP **நாள்**.19.10.2023
2) **மேலூர், திரு.ஜெ.முகிலன்,என்பவரின் விண்ணப்பம் நாள்**.31.10.2023
3) இந்நகராட்சி பொறியாளர் அறிக்கை நாள்.13.03.2024
4) இந்நகர்மன்ற தீர்மானம் எண். **464** நாள்.**05.03.2024.**
5) **திரு.ஜெ.முகிலன் என்பவரின் விண்ணப்பம் நாள்.22.03.2024**
6) நகரமைப்பு ஆய்வாளரின் அறிக்கை நாள்.27.03.2024

*********

**ஆணை**

பார்வை1ல் கண்டுள்ள மதுரை நகர்ஊரமைப்பு துறை உதவி இயக்குநர் அவர்களின் ஆணையின்படி, பார்வை**2**ல் காணும் மனுதாரர் திரு.ஜெ.முகிலன் என்பவரின் விண்ணபத்தில் மேலூர் கிராமம் **வார்டு பி,ப்ளாக்** 21 நகரளவு எண்.10/34(Old R.S.396/1)**ல் கட்டுப்பட்ட** 53 **சென்ட்** பரப்பளவில் அமைந்துள்ள மனையிடத்திற்கு இறுதி அனுமதி வழங்க கோரியதை தொடர்ந்து, பார்வை **3**ல் காணும் இந்நகராட்சி பொறியாளரின் அறிக்கையின்படி அடிப்படை கட்டமைப்பு கட்டணமாக ரூ.**1,60,500/-** மதிப்பீடு தயார்செய்யப்பட்டது. **பார்வை 4ல் காணும் விண்ணபத்தின் படி மதிப்பீட்டு தொகை ரூ.1,60,500/-**மனுதாரர் **இந்நகராட்சியில் செலுத்தப்பட்டுள்ளது. (செலவு சீட்டு**எண்.**116/ML1/1/23-24/0004719** நாள்.**01.04.2024) .**

பார்வை **1**ல் கண்டுள்ள இணையதள அனுமதி ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி, பார்வை **4**ல் இந்நகர்மன்ற தீர்மானத்தின் ஒப்புதலின்படி, கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு மேற்கண்ட மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்கப்படுகிறது.

1) உதவி இயக்குநர்/உறுப்பினர் செயலர்(பொ) மதுரை மாவட்டம் நகர் ஊரமைப்பு அலுவலகம், மதுரை உள்ளூர் திட்டக்குழுமம் அவர்களின் (இணையதளம்) ந.க.எண். **74/2023/SWP/TJDOMLL9/2023/TCP** நாள்.**19.10.2023** தெரிவிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப ஒப்புதலில் பெறப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி வழங்கப்படுகிறது.
2) மேற்கண்ட மனையிடத்தினை கிரையபத்திரம் எழுதிகொடுக்கும்போது மேற்கண்ட உறுப்பினர் செயலர், மதுரை மாவட்டம் நகர் ஊரமைப்பு துறை துணை இயக்குநர் அலுவலகம் அவர்களின் (இணையதளம்) ந.க.எண். **74/2023/SWP/TJDOMLL9/2023/TCP** நாள்.**19.10.2023**ல் உள்ள ஆணையினை இணைக்கப்பட வேண்டும்.
3) நகராட்சிக்கு தானமாக எழுதிக்கொடுத்த சாலையில் பின்நாளில் ஆக்கிரமிப்புகள் எதுவும் மேற்கொள்ளக்கூடாது.
4) தணிக்கையில் பின்னாளில் ஏதேனும் ஆட்சேபனைகள் எழுப்பப்பட்டால் அதற்கு தாங்க**ளையே** முழுபொறுப்பாக்கப்படும்.
5) மேற்படி மனையிடத்தில் மின்சார வாரியத்தின் ஒப்புதலுடன் மின்கம்பங்கள் மாற்றப்பட வேண்டும்.
6) மேற்கண்ட நிபந்தனைகள் அனைத்திற்கும் நான் கட்டுப்படுவேன் என்று ரூ.**20** மதிப்புள்ள முத்திரையிட்ட தாளில் உறுதிப்பத்திரம் எழுதித்தர வேண்டி இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது.

27/03/2024

ஆணையாளர்,
மேலூர் நகராட்சி

இணைப்பு
வரைபடம்

27/3/2024

பெறுநர்
திரு.ஜெ.முகிலன்,
**1**கத்தப்பட்டார் தெரு.
மேலூர்.

நகல் : உதவி இயக்குநர்/உறுப்பினர் செயலர்(பொ)
மதுரை மாவட்டம் நகர் ஊரமைப்பு அலுவலகம், மதுரை.

நகல்: நகரமைப்பு ஆய்வாளர், மேலூர் நகராட்சி.